**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.64/2020 L.W.5 P.W.4**

| | | | |
|---|---|---|---|
| Name | சிவக்குமார் | Caste | |
| Father/Husband Name | சீனிவாசன் | Calling | |
| Village | எழுத்தூர் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 38 |
| District | கடலூர் | Time | 12.38 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதிமுறைகளின்படி 05.09.2023 நாளாகிய இன்று திரு.அன்பு பி.ஏ., பி.எல்., நீதித்துறை நடுவர், திட்டக்குடி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் எழுத்தூரில் குடும்பத்துடன் வசித்து கார் ஓட்டி ஜீவனம் செய்து வருகிறேன். எனக்கு இவ்வழக்கின் வாகன விபத்தில் இறந்த கிருஷ்ணன், அ.சா.1 மணிகண்டன், அ.சா.2 பெரியசாமி, அ.சா.3 மருதமுத்து, பட்டியல் சாட்சிகள் 4, 6 முதல் 10 மற்றும் ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 09–03–2020 ம் தேதி காலை 8.00 மணியிலிருந்து 9.00 மணிக்குள் தொழுதூர் போலிஸார் சம்பவ இடமான எழுத்தூர் பேருந்து நிறுத்தத்திற்கு வந்தார்கள். அப்போது நானும், பட்டியல் சாட்சி இளையராஜாவும் அங்கு நின்றுகொண்டிருந்தோம் எங்களை விசாரித்து எந்த ஊர் என்று கேட்டார்கள் நாங்கள் இந்த ஊர்தான் என்று கூறினோம் சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்று கேட்டார்கள் நாங்கள் சம்பவ இடத்தை காண்பித்தோம். இரண்டு வெள்ளை தாள்களை எடுத்தார்கள். ஒரு வெள்ளை தாளில் படம் போட்டார்கள். மற்றொரு வெள்ளைத்தாளில் கிருஷ்ணனின் அட்ரஸை எழுதினார்கள்அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் போட்டோம். தற்போது சமூகம் நீதிமன்றத்தின் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான் அது **அ.சா.ஆ.2** ஆகும். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி முகவரி மற்றும் போலிஸார் விசாரித்ததை குறித்து மறைத்து சாட்சி அளித்ததால் அரசு தரப்பில் பகுதிய பிறழ்சாட்சியாக விடுத்த கோரிக்கையை ஏற்று சாட்சிய சட்டப்பிரிவு 154(1) ன் கீழ் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அரசு தரப்பில் முதல் விசாரணையில் சம்பவ சங்கதிகள் அனைத்தையும் முழுமையாக

கூறிவிட்டு பார்வை மகசரில் மட்டும் தன்னுடைய முகவரியை மறைத்து மேலும் போலிஸார் விசாரித்த விபரத்தை மறைத்து பகுதி பிறழ்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் **?** சரியல்ல**.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**

TITTAGUDI

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

**CC.No.64/2020 L.W.3 P.W.3**

| | | | |
|---|---|---|---|
| Name | மருதமுத்து | Caste | |
| Father/Husband Name | முருகேசன் | Calling | |
| Village | எழுத்தூர் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 23 |
| District | கடலூர் | Time | 12.32 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதிமுறைகளின்படி 05.09.2023 நாளாகிய இன்று திரு.அன்பு பி.ஏ., பி.எல்., நீதித்துறை நடுவர், திட்டக்குடி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1.** நான் எழுத்தூரில் குடும்பத்துடன் வசித்து ஆட்டோ ஓட்டி ஜீவனம் செய்து வருகிறேன். எனக்கு இவ்வழக்கின் வாகன விபத்தில் இறந்த கிருஷ்ணன், அ.சா.1 மணிகண்டன், அ.சா.2 பெரியசாமி பட்டியல் சாட்சிகள் 4 முதல் 10 மற்றும் ஆஜர் எதிரியையும் தெரியும். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். கடந்த 08–03–2020 ம் தேதி மாலை 4.30 மணியளவில் எழுத்தூர் தேசிய நெடுஞ்சாலை ஓரமாக கிருஷ்ணன் என்பவர் புகையிலையை போட்டுக்கொண்டு போயிக்கொண்டிருந்தார். அப்போது திருச்சியிலிருந்து சென்னையை நோக்கி ஒரு டவேரா கார் வேகமாக வந்தது. ஆரண்அடிக்காமல் வந்து கிருஷ்ணன் மீது மோதிவிட்டது. அதில் கிருஷ்ணனுக்கு கை, கால், வலது காது அடிப்பட்டதாக சாட்சி கையை வைத்து அடையாளம் காட்டுகிறார். அந்த விபத்தை ஏற்படுதிய டவேரா காரின் பதிவெண் எனக்கு தெரியும். TN-31-BC-8965 ஆகும். பிறகு சம்பவம் நடந்த இடத்தில் நானும், அ.சா. 2 பெரியசாமியும் இன்னும் இரண்டு, மூன்று நபர்கள் நின்றுகொண்டிருந்தனர். அவருடைய மகனுக்கு தகவல்சொன்னோம். போலிஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT INPRESENCE OF ACCUSED READOVER TO THE DEPONENT AND ADMITTED BY HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**

TITTAGUDI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.64/**2020** **L.W.2** P.W.2

| Name | பெரியசாமி | Caste | |
|---|---|---|---|
| Father/Husband Name | நாராயணசாமி | Calling | |
| Village | எழுத்தூர் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 46 |
| District | கடலூர் | Time | 12.25 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதிமுறைகளின்படி 05.09.2023 நாளாகிய இன்று திரு.அன்பு பி.ஏ., பி.எல்., நீதித்துறை நடுவர், திட்டக்குடி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் எழுத்தூரில் குடும்பத்துடன் வசித்து ஆட்டோ ஓட்டி ஜீவனம் செய்து வருகிறேன். எனக்கு இவ்வழக்கின் வாகன விபத்தில் இறந்த கிருஷ்ணன், அ.சா.1 மணிகண்டன், பட்டியல் சாட்சிகள் 3 முதல் 10 மற்றும் ஆஜர் எதிரியையும் தெரியும். கடந்த 08–03–2020 தேதி மாலை 4.30 மணியளவில் ஆட்டோ சவாரிக்காக நானும், மருதமுத்துவும் எழுத்தூர் பேருந்து நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்தோம். பிறகு திருச்சியிலிருந்து சென்னையை நோக்கி டவேரா கார் ஒன்று வேகம், அதிவேகம், அஜாக்கிரதையாக வந்து கிருஷ்ணனின் மீது மோதியதால் கீழே விழுந்து விட்டார். கிருஷ்ணனுக்கு அதில் கை, கால், தலையில் அடிப்பட்டது. பின்னர் அவருடைய மகன் மணிகண்டனுக்கு போன் செய்து தகவல் சொன்னோம். பின்னர் கிருஷ்ணனை 108 ஆம்புலன்ஸ் மூலமாக முதலில் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றனர். பின்னர் மணிகண்டன் கிருஷ்ணனை மேல் சிகிச்சைக்கு திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார் பின்னர் கிருஷ்ணன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் தற்போது தெரியவில்லை. போலிஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**

TITTAGUDI